[7th November 1966

(உ) இதுவரை அவர்களுக்கு அளிக்கப்பட்ட, மேலும் அளிக்கப்பட இருக்கும் உதவிகளின் விவரம் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) 240 குடும்பங்கள்.

(இ) பெரும்பான்மையான குடும்பங்கள் வளையமாதேவி கீழ்பாது, கீழக்கரை கிராமங்களில் குடியேறிவிட்டனர்.

(உ) —

1. அவர்கள் மறுவாழ்வுக்காக ஏற்கெனவே அளித்துள்ள உதவி விவரங்கள்.

வியாபாரக் கடன் திட்டத்தின்கீழ் இதுவரையில் ரூ. 1,07,655 வழங்கப்பட்டுள்ளது. பதது குடும்பங்களுக்கு நிலமும் மூன்று பேருக்கு முதியோர் பென்ஷனும் வழங்கப்பட்டுள்ளன. அகதிகளில் ஒருவர் கடைநிலை ஊழியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

II. அவர்கள் மறுவாழ்வுக்காக அளிக்கத் திட்டமிட்டுள்ள உதவி விவரங்கள்.

(1) சிதம்பரம் நகராட்சி மன்றம் பர்மா அகதிகள் வியாபாரம் செய்யும் பொருட்டு பெட்டிக்கடைகளை/கடைகளைக் கட்டத் தொடங்கியுள்ளது. பரங்கிப்பேட்டையிலும் பெட்டிக்கடைகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(2) 43 அகதிக் குடும்பங்களுக்கு வளையமாதேவி கீழ்பாதி கிராமத்தில் வீட்டு மனைகள் ஒதுக்குவது பற்றி ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

Free Trade Zone

* 465 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any study is conducted to decide whether Tuticorin can be developed into a Free Trade Zone, for promoting exports made from duty-free imported raw materials and semi-finished goods; and

(*b*) if so, the conclusions reached as a result thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The suitability for the location of a free trade zone in the Tuticorin area will be considered after the completion of the Deep Sea harbour there.

திரு. எம். எஸ். செல்வராஜன் : துறைமுக வளர்ச்சிக்கு இயல்பாக அந்தத் துறைமுகப் பகுதியில் தொழில்கள் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்பது கருத்து. இதுவரை இந்தத் துறைமுகம் சம்பந்தமாக நடந்திருக்கிற வேலைகளின் விகிதத்திற்கு ஏற்ப அந்தப் பகுதியில் தொழில்கள் வளர்ச்சி அடைந்து வருகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தொழில்கள் வளர்ச்சிக்கு நிலத்தை ஒதுக்கி வைத்திருக்கிறோம். இதுதான் நாம் இப்போது எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கை. ஆனால் ப்ரீ ட்ரேடிங்

ஸோன் என்பதாக சுங்க வரி இல்லாமல் அந்தப் பகுதியைச் செய்ய வேண்டும் என்பது கருத்து. அது ஹார்பர் வந்த பிறகு தான் பரிசீலிக்கப்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. சா. கணேசன் : கண்டாலா போன்ற இடங்களில் துறைமுகம் அமைவதற்கு முன்னதாகவே ஃப்ரீ ட்ரேடிங் ஸோன் என்பதாக குறிப்பிடப்பட்ட நிலை எல்லாம் இருந்து வருகிறது. அந்தமாதிரி இப்போதே இதைக் குறிப்பிடுவதற்கு என்ன தடங்கல் உண்டு? அல்லது அப்படிச் செய்வதனால் தனிப்பட்ட முறையில் ஏதேனும் தீமை ஏற்படக்கூடும் என்று அரசாங்கம் கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்தக் கருத்து அரசாங்கத்தினிடத்தில் இருக்கிறது. இந்தப் பகுதியை ஃப்ரீ ட்ரேடிங் ஸோனாக அறிவிக்க வேண்டும் என்பதாக நாஷனல் கவுன்சில் ஆஃப் அப்ளைட் எக்கானமிக் ரிசர்ச் சென்னை ராஜ்ய பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு இந்தச் சிபார்சை செய்திருக்கிறார்கள். இது பற்றிய முடிவு டீப் ஸீ ஹார்பர் வந்தபிறகு எடுக்கப்படும் என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

Road Safety Patrols

* 466 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any scheme has been envisaged to train Junior Traffic patrols, from out of students selected from High Schools in Madras City; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The Traffic Branch of the Madras City Police has drawn up a scheme of forming School Road Safety Patrols for school children; and the scheme will be given effect to in all schools situated on crowded roads having heavy traffic. The idea is to train the senior students, both boys and girls of High Schools, in traffic signals and how to cross pedestrian crossings on roads, observing traffic signals. The students trained in School Road Safety Patrols will control the movements of other school children in front of their own schools for half an hour before and half an hour after school hours.

திரு. அ. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை மற்ற பெரிய நகரங்களிலும் கொண்டுவர சர்க்கார் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது முதலிலே சென்னையில் பரீட்சார்த்தமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. இதுபற்றிய முடிவு இன்னும் எடுக்கவில்லை.